**This Question Paper consists of 31 questions and 8 printed pages.**
**8** பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் **31** வினாக்கள் உள்ளன.

**Roll No.** | | | | | | | | | | | | |

**Code No. 62/S/N/TM**
குறியீடு எண் :

**SET No. - A**

# TAMIL
# (தமிழ்)
# (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : **1.** ____________________

**2.** ____________________

---

**I. பொதுக்குறிப்புகள் :**

**1.** தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

**2.** வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

**3.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A), (B), (C), (D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

**4.** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

**5.** வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

**6.** உங்களது வினாத்தாளின் **Code** எண் **62/S/N/TM - A** விடைத்தாளில் எழுதுங்கள்.



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

# TAMIL

# (தமிழ்)

# (237)

கால அளவு : **3** மணி நேரம் ]　　　　[ மொ. மதிப்பெண் : **100**

---

**குறிப்பு :** (1) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) விடைகளுக்குரிய **சரியான** வினா எண்களை எழுதவும்.

---

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக. **1×11=11**

**1** தேவர் உலகம் வரை மணம் பரப்பும்?

(A) குறிஞ்சி மலர்　　(B) செண்பக மலர்

(C) மல்லிகை மலர்　　(D) செவ்வந்தி மலர்

**2** கரிய செம்மன்

(A) தசரதன்　　(B) இராமன்

(C) வசிட்டர்　　(D) இலக்குவன்

**3** மாடு என்பதன் பொருள்?

(A) தங்கம்　　(B) செல்வம்

(C) கல்வி　　(D) அறிவு

**4** ஓசோன் ஓட்டை எதைத் திறப்பது போல் உள்ளது

(A) வாயை　　(B) வாசலை

(C) நெற்றிக்கண்ணை　　(D) ஜன்னலை

**5** ஒருவர் வறுமையடையக் காரணமாக நாலடியார் கூறுவது

(A) சோம்பல்　　(B) தீவினை

(C) நல்வினை　　(D) கல்லாமை



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

6 புனல் என்ற சொல்லின் பொருள்

(A) நீர் (B) நெருப்பு

(C) சோலை (D) வளம்

7 முத்தாச்சிக்கிழவி யாரைப் பார்த்து பயந்தாள்.

(A) மக்களைப் பார்த்து (B) மிருகத்தைப் பார்த்து

(C) சங்குத் தேவனைப் பார்த்து (D) இருட்டைப் பார்த்து

8 .............. கடந்த பின் வரிப்பணம் வாங்க முடியாது

(A) சுங்கச் சாவடி (B) கோவில்

(C) அரண்மனை (D) சங்கம்

9 பிறையும் சடையும் சூடியவர்

(A) திருமலை முருகன் (B) திருமால்

(C) திருக்குற்றால நாதர் (D) யானை முகத்தான்

10 உயிர்மெய் எழுத்துகள் மொத்தம்

(A) 247

(B) 126

(C) 216

(D) 226

11 பாறைகளின் அருகே ..................... குகைகள் உள்ளன.

(A) மணற் (B) இயற்கை

(C) செயற்கை (D) சிறியா



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

12 கீழ்க்காணும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி.

1918இல் முதல் உலகப்போர் முடிந்ததும் போரின் தன்மை குறித்துப் பத்திரிகைகளில் அன்றாடம் காமராசர் படித்து வந்தார். உலகப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்திய மக்களுக்குக் காந்தியடிகள் விடுத்த அழைப்பைப் படித்தார். இரவுலட் சட்டத்தை எதிர்த்து 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் நாள் சத்தியாகிரகம் செய்யும்படியான அழைப்பே அது. பஞ்சாப் படுகொலை நிகழ்ச்சியே காமராசரின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது 'அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துச் சுதந்திர இந்தியாவை நிறுவ அண்ணலின் தொண்டனாகப் பாடுபடுவதே தனது ஒரே இலட்சியம்' எனச் சபதம் ஏற்றார். தொடர்ந்து 1920 இல் ஒத்துழையாமை இயக்கப் போரிலும், சட்ட மறுப்பு, அந்நியத் துணி எதிர்ப்புப் போரிலும் காமராசர் இறங்கினார். 1923 ஆம் ஆண்டில் காமராசர் கள்ளுக்கடை மறியலை மதுரை நகரில் முன்னின்று நடத்தினார். காந்தியடிகள் தொடங்கிய உப்புச் சத்தியாகிரகப் போரில் ஈடுபட்டு உப்புக் காய்ச்சியதற்காக் காமராசருக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அலிப்புரம் சிறையில் வைக்கப்பட்டார். காமராசர் சிறை சென்றது அதுவே முதல் முறை.

**வினாக்கள் :**

(1) காந்தியடிகள் மக்களுக்கு ஏதற்கு அழைப்பு விடுத்தார் ? 3

(2) காமராசரின் வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்திய நிகழ்ச்சி யாது ? 2

(3) காமராசர் எடுத்துக் கொண்ட சபதம் யாது ? 3

(4) காமராசர் முதன் முறையாக எப்போது எதற்காக சிறை சென்றார்? 3

13 பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

ஆசை அலைகள் நடுவினிலே
அன்புக் கடலும் தூங்கட்டும்
வேசம் போடும் மனிதருளம்
பாசம் தேடி வாழட்டும்!
ஆடையில்லா ஏழையுய்ய
அரசரென்போர் அதிகாரக்
கோடை வெப்பம் தணியட்டும்!
கொள்ளை யன்பு மலரட்டும்.

**வினாக்கள் :**

(1) கவிஞர் அன்புக் கடல் எதன் நடுவில் தூங்கட்டும் என்கிறார்? 2

(2) பாசம் தேடி யார் வாழட்டும் என்று கவிஞர் கூறுகின்றார்? 1

(3) ஏழை எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளான் ? 1

(4) அரசரின் அதிகாரத்திற்குக் கூறப்பட்டுள்ள உவமை யாது? 2


UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

14 பெரியோரின் சிறுபிழை எதனைப் போல் தெரியும் என்று பழமொழி நானூறு கூறுகிறது ? 1

15 கற்பதனால் ஏற்படும் பயன் யாது ? 1

16 முத்தாச்சி பார்த்த உருவம் எவ்வாறு இருந்தது ? 1

17 சுந்தரர் கனவில் இறைவன் கூறியது என்ன ? 1

18 தமிழில் மொழி பெயர்க்க. 2

(அ) intial

(ஆ) Time table

19 (அ) சேர்த்து எழுதுக. $2 \times \frac{1}{2} = 2$

(i) என் + ஆனால்

(ii) ஏமாப்பு + உடைத்து

(iii) சகடம் + கால்

(iv) கசடு + அற

(ஆ) கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு சொற்களை எழுதுக. 2

(1) வை

(2) லை

(இ) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. 2

(1) பிறர்க்கு உதவி செய்யாவிடினும் ..................... செய்யாமலிரு.

(2) பகிர்ந்து கொள்வதால் இன்பம் அதிகரிக்கும்; துன்பம் ..................... .



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

(ஈ) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக. 2

(1) நிருதர்

(2) வனம்

(3) எயிறு

(4) கொம்பு

20 பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. 2

(1) தலைமறைவானான்

(2) கை கொடுத்தல்

21 திட்ட உறுப்பினர்கள் யார் ? 1

22 உமது பகுதியில் நடைபெற்ற பொது நூலகம் திறப்பு விழா குறித்து குறிப்புரை எழுதுக. 4

23 பெரியோர் வாழும் முறை குறித்துப் பழமொழி கூறும் செய்தி யாது ? 5

24 மது அருந்துதல் தீங்கு தரும் என்பது குறித்த அறிவிப்புத் தருக. 5

**அல்லது)**

காசநோயினை விலக்குதல் பற்றி சுகாதாரத் துறை வரும் விளம்பர அறிவிப்பை எழுதுக.

25 (அ) ஆனை-ஆணை பொருள் வேறுபாடு கூறி தொடரில் அமைத்து எழுதுக. 2

(ஆ) உறுமுதல்-கனைத்தல் இவை எவ்விலங்குகளுக்குரிய ஒலிகளாகும் ? 2


UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

**26** பள்ளி மாணவர் மன்றம் சார்பாக வெளியிடப்படும் மலருக்காக வரவேற்கப்படும் படைப்புகள் குறித்துத் தகவல் பலகையில் இடம் பெறும் செய்திகள் குறித்து ஒரு அட்டவணை தயாரிக்க. **5**

**(அல்லது)**

வங்கியில் பணம் செலுத்தும் படிவத்தைப் பூர்த்தி செய்க.

திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி லிட்....திருநெல்வேலி

நாங்குநேரி கிளை

| விவரம் | ரூ | பை |
|---|---|---|
| 2000 x ..... | ..... | |
| 500 x ..... | ..... | |
| 100 x ..... | ..... | |
| 50 x ..... | ..... | |
| 20 x ..... | ..... | |
| 10 x ..... | ..... | |
| 5 x ..... | ..... | |
| காசுகள் | | |
| காசோலை/ | | |
| கூடுதல் | ...... | |

காசோலை/டிராப்ட்எண்: .........

தேதி : (அ). .......................

ரூபாய்: (ஆ)

திரு/திருமதி (இ) ...................................

...............................................................

........ உடைய சேமிப்பு கணக்கில் வைப்பதற்காக

ரூபாய் (ஈ)..................................................

...............................................................

சேமிப்பு கணக்கு எண் (உ) ..................

செலுத்துனர்: (ஊ)............

| காசாளர் | எழுத்தர் | மேலாளர் |
|---|---|---|
| .............. | ............ | .............. |

குறிப்பு: (1987543218 என்பதை வங்கிக் கணக்கு எண்ணாகவுடைய இளங்கோ / கமலா ஐந்து 2000 ரூபாய் தாள்களையும் ஒரு 500 ரூபாய் தாளையும் மூன்று இருபது ரூபாய் தாள்களையும் இரண்டு பத்து ரூபாய் தாளையும் 22.11.2018 அன்று வங்கியில் செலுத்துவதாகக் கொள்க.)

**27** பெரிய மருதுவின் இறைப்பற்றை விவரிக்க ? **5**

**(அல்லது)**

காந்தியடிகளை திருக்குறளோடு ஒப்புமைப் படுத்தி மு.வ. கூறும் கருத்துக்களை எழுதுக. ?



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

28 பிழை திருத்தம் செய்க : 5

(1) பல்லிக்கு விள் வளைக்கப்பட்டது ?

(2) இறாமனால் விள் வளைக்கப்பட்டது.

(3) வாலு! வாளவிடு!.

(4) மாணவர்கள் ஓடி வந்தான்.

(5) உலைத்தாள் முண்ணேறலாம்.

29 விளையாட்டுப் போட்டிகளில் அதிகப் பரிசுகள் பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக. 7

**(அல்லது)**

தமிழாசிரியர் வேலை வேண்டி தனியார் பள்ளி ஒன்றிர்க்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

30 பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை விளக்கி நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. 5

(அ) நான் சுவைத்த நூல்.

(ஆ) இன்பச் சுற்றுலா.

(இ) தாய்மொழி வழிக் கல்வி.

31 இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக. 10

(அ) நூலகம்.

(ஆ) உடலோம்பல்.

(இ) நான் விரும்பும் தலைவர்.

---



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279